# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


'உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள். எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன்." (யோவா 6:53-56)

# நோயுற்ற உலகில் நலமாக உள்ளோம் என்பது, ஏமாற்று வேலை- திருத்தந்தை

**வத்திக்கான்**:நம் அன்னை பூமி மீது ஏற்படுத்தியுள்ள காயங்கள், நம் வாழ்வையும் காயப்படுத்துகின்றன. சூழலியல் அமைப்பு களைப் பராமரிப்பது, வருங்காலத்தை நோக்கியதாக இருக்கவேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வருங்காலத் தலைமுறைகளுக்குச் சிறந்த மற்றும், நலமான பூமிக்கோளத்தை விட்டுச்செல்வதற்கு, மனிதரின் எண்ணங் களில் மாற்றம் தேவை என்று, ஜூன் 05, கடந்த வெள்ளியன்று சிறப்பிக்கப்பட்ட உலக சுற்றுச்சூழல் நாளில் அவர் மேற்கண்டவாறு கூறினார்..

கொரோனா கொள்ளைநோய் காரண மாக, இவ்வாண்டு உலக சுற்றுச்சூழல் நாள் கொலம்பியா நாட்டில் இணையதளம் வழியாக சிறப்பிக்கப்பட்டதை முன்னிட்டு, அந்நாட்டு அரசுத்தலைவர் Ivan Duque Marquez அவர்களுக்கு, திருத்தந்தை அனுப்பிய மடலில், இப்பூமிக்கோளத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர்கள் மதிக்கப்படுதல் ஆகிய இரு கூறுகளை வலியுறுத்தியுள்ளார்.

## நோயுற்ற உலகில் நலமான வாழ்வு

நோயுற்ற உலகில் நலமாக உள்ளோம் என, நம்மை நாமே ஏமாற்றிக்கொண் டிருக்கக் கூடாது என்று எழுதியுள்ள திருத்தந்தை, நம் அன்னை பூமி மீது ஏற்படுத்தியுள்ள காயங்கள், நம்மையும் காயப்படுத்துகின்றன என்றும், சூழலியல் அமைப்புகளைப் பராமரிப்பது, வருங் காலத்தை நோக்கியதாக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்பது, வாழ்வு மீதும், நம் பூமிக்கோளத்தின்



இப்போதைய நிலைமை பற்றிய நம் எண்ணம் மீதும் உண்மையிலேயே அக்கறை காட்டுவதாக இருக்கவேண்டும் எனவும் திருத்தந்தை கூறியுள்ளார்.

சுற்றுச்சூழல் அமைப்பின் அழிவு மற்றும், அது சுரண்டப்படுவதால் ஏற்படும் கடும் விளைவை உணரும்போது, நம்மால் மௌனம் காக்க முடியாது என்றும், பல நேரங்களில் முன்னேற்றம் என்ற பெயரில், இலாபம் என்ற பேராசையால், நம் பூமிக்கோளம் அழிவுறும் அடையாளங் களைக் கண்டும் காணாததுபோல் இருப்பதற்கு, இதுவல்ல நேரம் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சிறந்த வருங்காலம்

நம் வருங்காலத் தலைமுறைகளுக்கு சிறந்த மற்றும், நலமான உலகை அமைக்க நம்மை அர்ப்பணிப்பதற்கு வாய்ப்பு உள்ளது, ஆனால் அதனைச் செயல்படுத்துவது நம்மைச் சார்ந்தே உள்ளது என்றுரைத்துள்ள திருத்தந்தை, அண்மையில் சிறப்பிக்கப்பட்ட Laudato Si' திருமடல் வெளியிடப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிகழ்வுகள், நம் அன்னை பூமி, நம்மை நோக்கி எழுப்பும் அழுகுரல்கள் மீது கவனம் செலுத்தின என்பதையும் குறிப்பிட்டுள்ளார்

## நம் பாவங்களைப் பொருட்படுத்தாமல், கடவுள் நம்மை அன்புகூர்கிறார்

இந்த உலகம், தீமை மற்றும், ஊழலால் குறிக்கப்பட்டுள்ளது, மனிதர்களாகிய நாம் பாவிகள், இந்த உலகைத் தீர்ப்பிட கடவுள் தலையிடலாம், அவர் தீமையை அழித்து, பாவிகளைக் கண்டித்து திருத்தலாம், அதற்கு மாறாக, அவர், உலகின் பாவங்கள் மத்தியில் அதனை அன்புகூர்கிறார், நாம் தவறுகள் இழைத்தாலும், அவரைவிட்டு தொலைவில் சென்றாலும்கூட, அவர் நம் அனைவரையும் அன்புகூர்கிறார் என்று திருத்தந்தை கூறினார்.

கடவுள் உலகை எவ்வளவு தூரம் அன்புகூர்கிறார் என்றால், அதை மீட்கும் பொருட்டு தம் ஒரே மகனையே அனுப்பினார், எனவே மூவொரு கடவுள் அன்பானவர், இந்த உலகில் அவர் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார், உலகைக் காப்பாற்றி, புதுப்பிக்க விரும்புகிறார் என்றும், திருத்தந்தை எடுத்துரைத்தார்.

# கோலாசிலாங்கூர் சிற்றாலயத்தில் மனிதநேயப் பணி

**கோலா சிலாங்கூர்**: கோலாசிலாங்கூர் மாவட்டத்தில் அசாம் ஜாவா என்பது ஒரு சிறிய நகரம். இங்கே, ஆரோக்கிய அன்னையின் பெயரில் ஒரு சிற்றாலயம் உள்ளது. பெஸ்தாரி ஜெயா, புனித வனத்துச் சின்னப்பர் பங்கின் கண் காணிப்பில் உள்ள இந்த சிற்றாலயத்தை அருட்தந்தை VA மைக்கல் அவர்கள் நிர்வகித்து வருகிறார்.

இவர் இப்பகுதியில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் குறைந்த ஊதியம் பெறுபவர்களின் அவலநிலையைக் கவனத் தில் கொண்டு, அவர்களின் நலவாழ்வில் அக்கறையும் காட்டி வருகிறார். என்றால் மிகையாகாது. குறிப்பாக கோவிட் -19 தொற்றுநோயால் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் விளைவால், வருமான நிச்சயமற்ற இந்தக் காலத்தில், ஏழைகளில் பலர் பெரிதும் பாதிக்கப்ப ட்டுள்ளனர் என்பது வெள்ளிடைமலை. இக்காலத்தில் இவர் இவர்களின் துயர் துடைக்கும் பணிகளில் ஈடுபாடும் ஆர்வமும் காட்டி வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது..

ஆறுதலும் உதவியும் தேடி வரும் மக்களுக்கு இவரது தலைமையில், இந்த சிற்றாலயம் உதவிகரம் நீட்டும் தளமாக மாற்றம் கண்டது. கடந்த ஜூன் 7-ஆம் திகதி அன்று, 12 ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு ஒவ்வொரு குடும்பத் தையும் பரிதிநிதித்து ஒருவர் என ஏழு பேர் அழைக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட நடமாட்ட விதிமுறைக்ளுக்கு ஏற்ப சிற்றாலயத்தின் வளாகத்தில் 517 கிலோ மதிப்புள்ள அன்றாட உணவுப் பொருள் களை அருட்தந்தை V.A. மைக்கல் அவர்கள் எடுத்து வழங்கினார். கோலா லம்பூரில் உள்ள ஒரு சிறு கத்தோலிக்கக் குழுவினர் இந்த உணவுப் பொருள்களை வழங்கினர். இந்த உணவு பொருள்கள் அன்பளிப்பு ஏழைகளுக்கு ஓரளவு மன நிறைவை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.



# கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தப் பெருவிழா திருப்பலி

**கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தப் பெருவிழாவின் ஆரம்பம்**

பெல்ஜியம் நாட்டில், புனித Juliana de Cornillon அவர்கள் அடைந்த, ஆழ்நிலை இறையனுபவத்தைத் தொடர்ந்து, 1247-ஆம் ஆண்டில், அந்நாட்டின் Liege நகரில் கிறிஸ்துவின் தூய்மைமிகு திருஉடல், திருஇரத்தம் பெருவிழா, முதன்முதலில் சிறப்பிக்கப்படத் தொடங்கியது.

அதற்கு பல ஆண்டுகள் சென்று, 1263-ஆம் ஆண்டில், Bohemiaவைச் (செக் குடியரசு) சேர்ந்த ஓர் அருள்பணியாளர், திருநற்கருணையில் இயேசு உண்மையிலேயே பிரசன்னமாக இருக்கிறாரா என்ற சந்தேகத்துடன் இத்தாலிக்கு திருப்பயணம் ஒன்றை மேற்கொண்டார். அவர், இத்தாலியின் பொல்சேனா என்ற நகரில் திருப்பலி நிறைவேற்றியபோது, திருஅப்பம் உடைந்து சதையாக மாறியது மற்றும், அதிலிருந்து இரத்தமும் வடிந்தது. இந்த புதுமைக்குப்பின், 1264-ஆம் ஆண்டில் திருத்தந்தை 4-ஆம் உர்பான் அவர்கள், இந்தப் பெருவிழா, திருஅவை முழுவதிலும் சிறப்பிக்கப்படுமாறு பணித்தார்

**திருஅவையின் கோட்பாடு**

திருநற்கருணையில் இயேசு உண்மையிலேயே பிரசன்னமாய் இருக்கிறார் என்பதை, 1215-ஆம் ஆண்டில் நான் காவது இலாத்தரன் சங்கம் உறுதி செய்தது. பின்னர், 1551-ஆம் ஆண்டில், அதனை திரிதெந்து பொதுச்சங்கம் மீண்டும் உறுதிச்செய்தது.

*வத்திக்கான்.*



# திருஇருதய ஆண்டவர் பங்கில் தூய ஆவியார் ஆராதனை

**கோலாலம்பூர்:** தூய ஆவியார் பெரு விழாவை, முன்னிட்டு, கடந்த மே மாதத்தின் கடைசி நாளன்று இங்குள்ள திருஇருதய ஆண்டவர் பங்கின் இறைவேண்டல் பணிக்குழு, சிறப்பு இயங்கலை (online) ஆராதனை நிகழ்வை நடத்தியது. தூய ஆவியானவர் பெந்தகோஸ்து அன்று, எவ்வாறு தம் கொடைகளைப் பொழிந்தார் என்பதை நினைவுகூர்ந்து, அது எவ்வாறு முதலில் நடந்தது என்பதை அறிந்து, அவரது கொடைகளால் நிரப்பப்பட அவரை ஆராதிப்பதற்கு அன்றைய தினம் ஒரு பொருத்தமான ஞாயிறாக அமைந்தது. -

தூய ஆவியானவர் நமது அருள்மிகப்பெற்ற கன்னித் தாய் மற்றும் திருத்தூதர்கள் மீது தீ பிளம்புகள் வடிவில் இறங்கினார். தற்போதைய COVID-19 தொற்றுநோயால் நமது வழக்கமான திருவிழிப்பு இறைவேண்டல்களுக்கு ஒன்றுகூட முடியவில்லை என்றாலும், கடவுளின் தூய ஆவியானவர் திருஅவை பிறப்பு நாளில் மகிழ்ச்சியில் நிறைந்திருக்க ஒரு இயங்கலை (online) வாயிலாக ஒரு சமூகமாக நம்மை ஒன்றிணைத்தார்.

மே மாதம் முழுவதும், பங்கின் பல்வேறு அ.தி.சா-க்கள் இல்லங்களில் இருந்து செபமாலை செபிப்பதில் இணைந்திருக்க பல ஆக்கபூர்வமான வழிகளைக் கையாண்டனர்.. எங்கள் ஆரோக்கிய அன்னை சிற்றாலயத்தில் அன்னை மரியின் கெபியில் வழக்கமாக நிறைவு காணும் செபமாலை இறைவேண்டல் இம்முறை இயங்கலை வாயிலாகவே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

கத்தோலிக்கர்களாகிய, நம்முடைய இதயங்களில் கடவுளைத் தேட தூய ஆவியானவர் நமக்கு உதவுகிறார், வழிநடத்துகிறார் என்று நாம் நம்புகிறோம். அதேபோல், நம்முடைய பலவீனத்தில் ஆவியானவர் நமக்கு உதவுகிறார் என்பதை மறுப்பதற்கில்லை. தற்போதைய தொற்று நோய்களின் போது மட்டுமல்லாமல், தூய ஆவியின் ஏழு கொடைகளான ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத்திறன், ஆற்றல்,



நுண்மதி, ஆண்டவரைப்பற்றிய அச்ச உணர்வு (எசா 11:2-3) ஆகியவற்றை நாம் எப்போதும் நம்மில் கொண்டிருக்க வேண்டும், ஏனெனில், இவை நம்முடைய கத்தோலிக்க வாழ்நாள் முழுவதும் நமக்குத் தேவையான அத்தியாவசிய கொடைகளாகும் என்பது இந்த சிறப்பு ஆராதணையின் போது உணரப்பட்டது.

## மனித உரிமைகளை மீறுவது, இறைவனுக்கு எதிரான குற்றம்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஜார்ஜ் ஃபிளாய்ட் என்ற ஆப்ரிக்க-அமெரிக்க மனிதர், காவல்துறையினரால் கொல்லப்பட்டதையும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் வன்முறைகள் குறித்தும் தங்கள் கவலையைத் தெரிவித்து, அறிக்கை வெளியிட்டுள்ள கனடா நாட்டு ஆயர்கள், கடவுள் வழங்கிய மனித உரிமைகளை, குறைவாக மதிப்பிடல், மனித சமுதாயத்தை தரக்குறைவாக நடத்துதல், இனவெறியும் பாகுபாட்டு நிலைகளும், பிறரை மதிக்காமை போன்றவை, எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்று கூறியுள்ளனர்.

ஒவ்வொரு மனித வாழ்வின் புனிதத்தன்மையைக் காப்பாற்றுகிறோம் என்று கூறிக்கொண்டே, இனவெறிகளையும் பாகுபாடுகளையும் குறித்து கண்டும் காணாமல் செல்வது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ள வார்த்தைகளை, தங்கள் அறிக்கையில் மேற்கோளாகக் காட்டியுள்ள ஆயர்கள், கடவுளின் சாயலால் படைக்கப்பட்ட மனிதரின் உரிமைகளை மீறுவது, இறைவனுக்கு எதிராகச் செய்யும் குற்றம் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.



## மார்ட்டின் லூத்தர் கிங் காட்டிய வழியில் போராட அழைப்பு

இனவெறி என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் நிலவும் அநீதி அல்ல, அது, தென் ஆப்ரிக்காவில் இருந்து, இன்னும் பல நாடுகளில், சாதிய அநீதியாக, பழங்குடியினருக்கு எதிரான அநீதியாக தொடர்ந்து வருகிறது என்று திருப்பீடத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் Minneapolis நகரில் ஆப்ரிக்க அமெரிக்கரான George Floyd அவர்கள் கொலையுண்டதைத் தொடர்ந்து, அந்நாட்டில் பரவியுள்ள போராட்டங்கள் குறித்து, ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத் திருப்பீட அவையின் தலைவர், கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள், வத்திக்கான் செய்திக்கு அளித்த பேட்டியில், பல்வேறு வழிகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் நிலவும் சமுதாயப் பாகுபாடுகள் குறித்து பேசினார்.

வன்முறையற்ற போராட்டங்களுக்கு மார்ட்டின் லூத்தர் கிங் ஜூனியர் அவர்களின் தலைமையில் நிகழ்ந்த போராட்டங்கள், உலகிற்கே சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன என்பதை சுட்டிக்காட்டினார். இரத்தம் சிந்தாத, வன்முறையற்ற போராட்டங்கள் தொடர வேண்டும். மனித உரிமை என்பது இரத்தம் சிந்துதல் மற்றும் உயிர் பலிகள் மூலம்தான் பெற இயலும் என்பதல்ல..

# நற்கருணை- நமக்கான கடவுளின் மாபெரும் கொடை

இன்று திருஅவை இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. நற்கருணை எனும் அருளடையாளத்தின் வழி இக்கொடை நமக்கு அருளப்படுகிறது. அனைத்து அருளடையாளங்குக்கும் மையமாக விளங்குவது நற்கருணை. ஏனெனில், எல்லா அருள்களுக்கும் ஊற்றாக உள்ள இயேசுவை நமக்கு அவரது உடலாகவும் இரத்தமாகவும் வழங்குவது நற்கருணை. நற்கருணை திருஅவை முழுவதும் ஒவ்வொரு நாளும் வளர்ச்சியடைவதற்கு அச்சாரமாகவும் உணவாகவும் உள்ளது.

திருப்பலியில் அப்பமும் திராட்சை இரசமும் தூய ஆவியாரால் இயேசு கிறிஸ்துவின் திருஉடலாகவும் திருஇரத்தமாகவும் மாற்றப்பட்டு நற்கருணையாக நம்மில் உறைகிறார். நற்கருணை இயேசு கிறிஸ்துவின்ம் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மறைபொருள்.

இன்றைய முதல் வாசகமானது, சீனாய் மலையில், இஸ்ரயேலருக்கும் கடவுளுக்குமிடையே செய்யப்பட்ட உறவு ஒன்றிப்பை எடுத்தியம்புகிறது. மனிதன் அப்பதினால் மட்டுமல்ல மாறாகக், கடவுளின் வாய்ச் சொல் ஒவ்வொன்றினாலும் உயிர்வாழ்கிறான என்பதை வலியுறுத்துகிறது. \

உடல். இரத்தம் என்பது, மனித வாழ்வைக் குறிப்பது. அதனால், நாம் இன்று இயேசுவின் வாழ்வைக் கொண்டாடுகிறோம். அவர் தம் உடலையும், இரத்தத்தையும் நம் வாழ்வுக்காய் கையளித்ததால் அவரது வாழ்வோடு நம் வாழ்வையும் இணைத்து கொண்டாடுகிறோம். இந்த விழா அடிப்படையில வாழ்வு விழா என்றுகூட அழைக்கப்படலாம்.

இன்றையக் காலச் சூழலை நாம் சவாலாக ஏற்றுக்கொண்டு, ஆலயத்தில் திருப்பலியில் கலந்துகொள்ள இயலாத நிலையில் நற்கருணைக்காக ஏங்கும் நாம், அவரது திருவுடலைச் சுவைக்கும் காலம் தூரத்தில் இல்லை என்பதை ஏற்போம்.

இயேசு கிறிஸ்து நமக்கு உடலாகவும், இரத்தமாகவும் ஆன்மீக உணவாக மட்டுமல்ல, அவரையே அன்போடு நமக்கு அருளுகிறார். நற்கருணையின் வழி அவர் நமக்காகவும் உலகின் மீட்புக்காவும் பிட்கப்படும் அப்பமாகவும் திகழ்கிறார்.

இவ்வேளையில், அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம் எனும் புனித பவுல் அடிகளின் வார்த்தையை மனதில் நிறுத்த வேண்டும். நற்கருணை நம்மை ஒன்றிக்கும் அருட்சாதனம். அத்தோடு அதுவே திருஅவையின் அனைத்து செயல்பாடுகளுக்கும் ஊற்றாகவும் உச்சமாகவும் உள்ளது என இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் வலியுறுத்திக் கூறுகிறது. நாம் உட்கொள்ளும் நற்கருணை நம்மை பிறருக்காக வாழ்வுகொடுக்கத் தூண்ட வேண்டும். அப்போதுதான் நாம் உட்கொள்ளும் நற்கருணைக்கு அர்த்தம் இருக்கின்றது.

எனவே, ஆண்டவரின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவைக் கொண்டாடும் இந்த நாளில் அவர் நமக்காக தன்னுடைய உடலையும் இரத்தத்தையும் தந்தார் என்பதை உணர்ந்து, நாமும் அவரைப் போன்று பிறர் வாழ்வுபெற நம்மையே தியாகமாய் தருவோம், திருப்பலியில் ஆன்மீக நீதியில் கலந்துகொண்டாலும். நற்கருணையை உட்கொள்ள இயலா விட்டாலும், நற்கருணை நம்மை ஆட்கொள்கின்றது என்பதை முழுமையாக ஏற்று இறையருளை நிறைவாய் பெறுவோம். நாம் விண்ணகத்திற்கு செல்ல மிக எளியதும் பாதுகாப்புமான வழி, நற்கருணையே!' என்றார் புனித பத்தாம் பயஸ்.(திருத்தந்தை 10-ஆம் பத்திநாதர்)

**கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம்**

இச 8: 2-3,14b-16ய
திபா 147: 12-13. 14-15. 19-20
1 கொரி 10: 16-17
யோவா 6: 51-58

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : பெருவிழா**